ஏப்ரல் – 14 அன்று அனைத்து மாவட்டக் கழக அலுவலகங்களிலும்

"சமத்துவ நாள்" உறுதிமொழி ஏற்று

# அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் கொண்டாடிடுக!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

"வடக்கில் உதித்த சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி இனி சமத்துவ நாள் என்று கொண்டாடப்படும்" என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் அறிவித்து, அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் அன்றும் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து, "சமத்துவநாள் உறுதிமொழி" ஏற்றுக் கொண்டு வரப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டக் கழக அலுவலகங்களிலும் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத்தினர் மலர் தூவி மரியாதை செலுத்தி;

கீழே குறிப்பிடப்பட்டுள்ள "சமத்துவ நாள்" உறுதிமொழியை ஏற்று, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை "சமத்துவ நாளாக" கொண்டாடிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"சமத்துவ நாள்" உறுதி மொழி

**சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும்,**
**சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகவும், தொடர்ந்து போராடி,**
**ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும்,**
**ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும்,**
**வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து,**
**எளிய மக்களின் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிய,**
**நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளில்,**
**சாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க,**
**நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும்,**
**சகமனிதர்களைச் சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமாட்டேன் என்றும்,**
**சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைபிடிப்பேன் என்றும் உளமார உறுதி ஏற்கிறேன்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 12.04.2025

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

செய்யாறு தொழிற்பூங்காவிலிருந்து

# எண்ணூர் துறைமுகத்திற்கு தொழிற்தடச் சாலை!

## சட்டப் பேரவையில் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி நன்றி!



சென்னை, ஏப். 13- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது பேரவைதுணைத்தலைவர் கு.பிச்சாண்டி, செய்யாறு தொழிற் பூங்காவிலிருந்து எண்ணூர் துறைமுகத்திற்கு தொழிற் தடச்சாலை அமைக்கப்படும் என்று அறிவித்ததற்கு முதல்வர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்று பேசினார்.

இதுபற்றிய விவாதம் வருமாறு:-

**கு. பிச்சாண்டி** :(பேரவைத் துணைத் தலைவர்): பேரவைத் தலைவர் அவர்களே இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் போது செய்யாறில் அமைந்துள்ள தொழிற்பூங்காவிலிருந்து எண்ணூர் துறைமுகத்திற்கு ஏற்றுமதிப் பொருட்களை விரைவாக எடுத்துச் செல்ல ஒரு தொழிற்தடச் சாலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்காக முதலமைச்சர், நிதி அமைச்சர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் என அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்கு வரும் ஆன்மிக பக்தர்களின் வசதிக்காகவும் மற்றும் மாவட்டத் தலைநகர் திருவண்ணாமலையில்

பாண்டி-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை NH 66, இணைக்கக்கூடிய சாலை இருக்கின்ற காரணத்தால், அதை இணைப்பதற்கு ஏதுவாகவும், மேற்கண்ட தொழிற்தடச் சாலை திருவண்ணாமலை வரை நீட்டிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஆய்வு மாளிகை, தேசிய நெடுஞ் சாலைபோல இப்போது திண்டிவனத்தில் கட்டப்பட்டு பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. எனவே, தேசிய நெடுஞ்சாலைகளில் கட்டப்பட்ட ஆய்வு மாளிகைகளைப் பயன்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**அமைச்சர் எ.வ.வேலு:** அதாவது செய்யாறு SIPCOT-ஐயும் சென்னையையும் ஒருங்கிணைப்பதற்காக தமிழ்நாடு அரசின் சார்பாக ஒரு புதிய திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார். ஏனென்றால், SIPCOT-ல் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், சென்னை துறைமுகத்திற்கு வந்தால் தான் வெளிநாடுகளுக்கு அனுப்பமுடியும். அதனால் புதிதாக ஒரு தொழிற்தடத் திட்டத்தை அறிவித்திருக்கிறார். அந்தத் தொழிற்தடத்தை திருவண்ணாமலை வரை நீட்டித்துத் தரவேண்டும் என்பதுதான் அவருடைய கேள்வி. நானும் திருவண்ணாமலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதனைக் கொண்டுசென்று, செய்யாறிலிருந்து திருவண்ணாமலையை-, திருவண்ணாமலை என்பது ஒரு மாவட்டத் தலைநகர், எனவே, மாவட்டத் தலைநகருக்கு அதனை இணைக்கின்ற பணியை இரண்டாம் கட்டமாக முயற்சி எடுப்பதற்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும்.

அதே நேரத்தில், பெரிய கோளாப்பாடி, வேங்கிக்கால் போன்ற பகுதிகளில் சிட்கோ இருக்கிறது. அந்தப் பகுதிகளிலும் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டால், அவை சென்னை துறைமுகத்திற்கு வருவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதையும் மனதில் எடுத்துக் கொண்டு-, இன்னொன்று, பெரும்பான்மையாக பிற மாநிலத்தில் இருப்பவர்கள், சென்னையைச் சேர்ந்தவர்கள் ஒரு நாளைக்கு 10,000 முதல் 25,000 நபர்கள் திருவண்ணாமலைக்கு ஆன்மிக கடனைச் செலுத்துவதற்காக வந்து கொண்டிருக்கிறார்.

அப்படி ஒரு கூட்டம் வந்துகொண்டிருக்கிறது. அதனால் இந்தச்சாலையை நீட்டிப்பதன்மூலமாக திருவண்ணாமலை மாவட்ட தலைநகருக்கும் சாலை அமைத்ததாக இருக்கும்; அங்குள்ள SIDCO பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை துறைமுகத்திற்குக் கொண்டு வருவதற்கும் பயனுள்ளதாக இருக்கும்; ஆன்மிக கடனைச் செலுத்தவரும் ஆன்மிகப் பெருமக்களுக்கும் உதவியாக இருக்கும். அதனால், உறுப்பினர் பிச்சாண்டி அவர்களின் கோரிக்கையை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்தச் சாலையை நீட்டிப்பதற்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சா. கணேசன்

### ஏப்ரல் 13 (2018)



**தனது இளமை காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்து கொண்ட இவர், பி அன்ட் சி மில் அங்காடி விற்பனையாளராக இருந்தபோதே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் பழகியவர்.**

**1959, 64, 68 ஆகிய மூன்று முறை தொடர்ந்து மாமன்ற உறுப்பினராகவும் – 1970–ல் சென்னை மாநகர மேயராகவும் – தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**

**சென்னை மாநகர மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் தனி முத்திரை பதித்தவர், இவர், கவுன்சிலர் என்ற முறையில் மாநகர பேருந்துகளில் பயணித்து மக்களின் குறைகளை நேரடியாக அறிந்ததோடு, மேயராக இருந்த போது மும்பை மேயர்கள் மாநாட்டில் பங்கேற்று வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றி, தமிழகத்திற்கும் கழகத்திற்கும் பெருமை சேர்த்தவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர்.**

**"தன்னலம் பார்க்காமல் கட்சிக்காக உழைத்த, சுயநலம் பார்க்காமல் பொதுநலம் ஒன்றை மனதில் வைத்து, இந்த மாநகர மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்காக பாடுபட்ட ஒரு தொண்டரின் படத்தை; தொண்டர் என்பதை விட மக்களின் ஊழியரின் படத்தை அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்கள் ஊழியரின் படத்தை இங்கே திறந்து வைத்திருக்கிறேன்." என கழகத் தலைவர் அவர்கள் இவரது படத்திறப்பு விழா உரையில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



இராணிப்பேட்டை முத்துக்கடையில் மாவட்ட அனைத்து ஜமாஅத் மற்றும் திராவிட நட்புக் கழகம் இணைந்து நடத்தும் வக்பு சட்டத் திருத்த மசோதாவை ரத்து செய்யக்கோரி ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன மாநாடு ஆர்ப்பாட்டம் ஆ.சிங்கராயர் (தலைவர் திராவிட நட்பு கழகம்) தலைமையில் நடைபெற்றது. இதில் கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இதில் அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, பேராசிரியர் சுப.வீரபாண்டியன், அருட்தந்தை ஜெகத்கஸ்பர், கா.நவாஸ்கனி.எம்.பி., ஆளூர் ஷா நவாஸ் எம்.எல்.ஏ., ஆர்.வினோத்காந்தி, ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ஏ.கே.சுந்தரமூர்த்தி, துரை மஸ்தான், எஸ்.வினோத் எம்.சி., இசட்.அப்துல்லா எம்.சி. வழக்கறிஞர் ஜெயக்குமார் ஏர்டெல் குமார்.எம்.சி., ஜெ.கோபிகிருஷ்ணன், சிவா, வழக்கறிஞர் முகமதுசாதிக் உதீன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

ஆம்பூர் தொகுதி – மாதனூர் ஊராட்சியில்

# ஆலங்குப்பம் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம்!

## சட்டப் பேரவையில் ஆம்பூர் தொகுதி – அ.செ.வில்வநாதன் கோரிக்கை!



சென்னை, ஏப்.13- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது ஆம்பூர் தொகுதி உறுப்பினர் அ.செ.வில்வநாதன் கேட்ட கேள்வியும், அதற்கு அமைச்சர் மா. சுப்பிர மணியன் அளித்த பதிலும் வருமாறு:-

**அ.செ. வில்வநாதன்:** ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், ஆலங்குப்பம் துணை சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** (அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் ஊராட்சி ஒன்றியம், மின்னூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் ஆலங்குப்பம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆலங்குப்பம் துணை சுகாதார நிலையத்திற்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் விரைவுபடுத்தப் பட்டு, மிக விரைவில் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

**அ.செ.வில்வநாதன்:** மாதனூர் ஊராட்சி ஒன்றியம், ஆலங்குப்பம் துணை சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் தந்தமைக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டு மல்ல, மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தில் வடபுதுப்பட்டு, வெங்கிலி, சோலூர், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் பள்ளிப்பட்டு, வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில், ஆசனாம்பட்டு ஊராட்சியில் கல்லாபாறையில் துணை சுகாதார நிலையங்கள் அமைத்துத் தந்தமைக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஆம்பூர் நகரில் புதியதாக இரண்டு நகர்ப்புற நலவாழ்வு மையக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டு, செயல்பாட்டிற்குக் கொண்டு வந்தமைக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி, மாதனூர் சமுதாய சுகாதார நிலையத்திற்குட்பட்டு இரண்டு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், ரெட்டித்தோப்பு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் 62,000 மக்கள் தொகையுடன் 2016 ஆம் ஆண்டு பழைய நகராட்சி அலுவலகத்தில் தொடங்கப்பட்டது. இந்த சுகாதார நிலையத்திற்கு இதுநாள் வரை கட்டடம் இல்லை. இதற்கு பிரசவம் பார்க்கும் கட்டடம், பிரசவ பின் கவனிப்புக் கட்டடம் ஆகியவற்றுடன்கூடிய கட்டடத்தைக் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** இந்த அரசு அமையப்பெற்றவுடன், ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில் ஏற்கெனவே இரண்டு நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், கரப்பட்டு, வடசேரி, வீராங் குப்பம், பள்ளிப்பட்டு, வடபுதுப்பட்டு ஆகிய இடங்களில் ஐந்து சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்கள், மாதனூர் மற்றும் மின்னூர் ஆகிய இடங்களில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்கள், மாதனூர் மற்றும் நரியம்பட்டு ஆகிய இரண்டு இடங்களில் ஆயுஷ் நலவாழ்வு மையங்கள், ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு ஒரு மருத்துவக் கட்டடம், மாதனூரில் ஒரு வட்டாரப் பொது சுகாதார நிலையக் கட்டடம், ஆலாங்குப்பத்தில் ஒரு துணை சுகாதார நிலையக் கட்டடம், சோலூரில் ஒரு துணை சுகாதார நிலையக் கட்டடம், வெங்கிலியில் ஒரு துணை சுகாதார நிலையக் கட்டடம், நரியம்பட்டில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம், ஆம்பூர், ஏ.கஸ்பாவில் ஒரு துணை சுகாதார நிலையக் கட்டடம் என்று 24 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதையும் தாண்டி, மன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கட்டடங்களுக்கு புதிய கட்டடங்கள் முன்னுரிமை அடிப்படையில் கட்டித் தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்

**அ.செ.வில்வநாதன்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட பெரியாங்குப்பம் மற்றும் வெங்கடசமுத்திரம் துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தர இட வசதி உள்ளது. அதேபோன்று வேலூர் மாவட்டத்திலுள்ள அகரம் சேரி, அஹ்ராஹரம் ஊராட்சிகளில் கட்டடம் இல்லாமல் அஹ்ராஹரம் ஊராட்சி மன்ற கட்டடத்தில் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இவற்றிற்கு அரசு துணை சுகாதார நிலைய கட்டடம் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, ஏறத்தாழ 28 கோடி ரூபாய் செலவிலான புதிய கட்டடங்கள் ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எதிர்காலத்தில் கட்டப்பட வேண்டுமென்று நினைக்கின்ற கட்டடங்களுக்கு அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியினை தந்து உதவ வேண்டுமென்று தங்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.எஸ். தென்னரசு

### ஏப்ரல் 13 (1991)



**தென்மாவட்டங்களில் கழகம் வலிவுடன் வளர பெரிதும் காரணமானவரும், மூத்த தளபதிகளில் ஒருவராகவும் இருந்து கழகத்தை வழிநடத்திச் சென்ற ஆற்றலாளர்.**

**அண்ணாவால் அரவணைக்கப்பட்டு அரசியலில் நுழைந்து கலைஞரின் இதயத்தில் தனி இடம் பெற்றவர்.**

**சிறுகதை மன்னன், சின்னமருது என்றெல்லாம் அழைக்கப்பட்டவர்.**

**1949ல் கிளைச் செயலாளராக பொறுப்பேற்று, வட்டச் செயலாளராக வளர்ந்து, மாவட்டச் செயலாளராக உயர்ந்து, படிப்படியாக கழக அமைப்புகளின் நுணுக்கங்களை அனுபவ பூர்வமாக அறிந்த காரணத்தால், அமைப்புச் செயலாளர் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டவர்.**

**ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்திற்கு, மாவட்டச் செயலாளராக 15 ஆண்டுகள் பணியாற்றிய பெருமை இவருக்கு உண்டு.**

**தி.மு.கழகத்தின் சிறைப் பறவையாக வாழ்ந்து காட்டியவர். 26 முறை கழகத்திற்காக சிறை சென்றவர். மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறைவாசம் இருந்தவர். அதேபோன்று 1965ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் கடுங்காவல் தண்டனை பெற்றவர்.**

**தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக 1989ஆம் ஆண்டு திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 1990ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்கள்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**